# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 199/மா/2025

நாள்: 23.02.2026

V. முத்துசாமி,
நாமக்கல். --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி.
(2) பத்மினி,
நாமக்கல். --- எதிர்மனுதாரர்கள்

நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38-G என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. முத்துசாமி என்பவரின் 09.05.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2025 அன்று பெறப்பட்டு, 199/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38-G என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. முத்துசாமி என்பவர் தனது 09.05.2025 மற்றும் 05.08.2025 நாளிட்ட மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"09.05.2025 நாளிட்ட மனு

நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38-G என்ற முகவரியில் எனது மனைவி திருமதி M. காளியம்மாள் பெயரில் உள்ள நிலத்தில் சொந்தமாக வீடு கட்டி நானும் எனது மனைவியும் குடியிருந்து வருகிறோம். எங்களது வீடு வீதியின் கடைசி பகுதியில் காம்பவுண்ட் சுவரை ஒட்டி உள்ளது. அதற்கு மேல் வீடுகள் இல்லை.

எங்களது வீட்டிற்கு எதிர்புறத்தில் திருமதி பத்மினி என்பவர் 20 அடி பொதுப்பாதையில் 1½ அடி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி உள்ளார். அதோடு மட்டுமல்லாமல் தனது வீட்டை ஒட்டி சுமார் 10 அடி அகலத்திற்கு சுமார் 1–½ அடிக்கு மேலாக பொதுப்பாதையை உயர்த்தி கான்கிரீட் தளம் அமைத்துள்ளார். அதனால் எங்களது வீடு பள்ளத்தில் உள்ளது. இது சம்பந்தமாக கடந்த 25.10.2022–ல் நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் விண்ணப்பித்து இருந்தேன். எவ்வித

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 04.05.2023 அன்றும் நகராட்சி ஆணையருக்கு பதிவு அஞ்சல் மூலம் விண்ணபத்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதன் பிறகு கடந்த 16.05.2023 அன்று நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் இரண்டு பணியாளர்களுடன் நேரில் வந்து திருமதி பத்மினி அவர்கள் 1½ அடி பொது பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தையும் பொது பாதையும் அளவீடு செய்துவிட்டு இந்த கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி முறைக்கேடாக பெற்றுள்ளதாகவும் உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிவிட்டு சென்று எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே நானும் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று நகரமைப்பு ஆய்வாளர் அவர்களை நடவடிக்கைப் பற்றி பலமுறை விசாரித்தேன். இறுதியாக அவர் இது மேல் இடத்தில் இருந்து பிரசர் வருகிறபடியால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்றும் தாங்கள் கோர்ட்டில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மேலும் கடந்த 03.06.2023 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அரசு செயலாளர். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களுக்கும் பதிவு அஞ்சல் மூலம் விண்ணபித்திருந்தேன். அதோடு கடந்த 07.06.2023 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரில் விண்ணப்பம் கொடுத்துள்ளேன்.

இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 2024 டிசம்பர் மாதத்தில் மேற்படி தெருவில் பாதாள சாக்கடைப் பணி மேற்கொள்ளப்பட்டதில் தெருவின் மத்தியில் கழிவுநீர் மெயின் தொட்டி அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு பணி நடைப்பெற்றது. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இடத்தை மாற்றி திருமதி பத்மினி வீட்டிற்கு மிக அருகாமையில் அவருக்கு மட்டும் சாதகமாக உயரமாக தனியாக மெயின் தொட்டி அமைத்து கொடுத்துள்ளார்.

மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர் இணைப்பு கொடுத்து முடிந்தபிறகு ரோடு போடும் பட்சத்தில் எங்களது வீடு மட்டும் பள்ளத்திலும் ரோடு உயரமாகவும் அமைந்து மழைநீர் எங்களது வீட்டிற்குள் வருவதற்கு அதிகப்படியான வாய்ப்பு உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் கழிவுநீர் தொட்டி அமைக்கப்பட்டிருந்தால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. மேலும் மேற்படி தெருவில் எங்களது வீட்டிற்கு மட்டுமே அதிக பாதிப்பு உள்ளது.

கடந்த 05.01.2025–ல் கழிவு நீர் மெயின் தொட்டிக்கு செல்வதற்காக குழாய் பதித்து சேம்பர் கட்டி உள்ளார்கள். இன்று வரை கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. ஆனால் எங்களது வீட்டுக் கழிவுநீர் மெயின் தொட்டிக்கு செல்வதற்கு இயலாத நிலையில் உள்ளது. எனவே இது சம்பந்தமாக நாமக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர், சென்னை அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தக்க நடவடிக்கை கோரி பதிவு அஞ்சல் மூலம் விண்ணபித்திருந்தேன். இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எங்களது வீட்டிற்கு மட்டும் வெகு தொலைவில் உள்ள மெயின் கழிவு நீர் தொட்டிக்கு இணைப்பு கொடுக்கும்படியாக உள்ளது. இதனால் எனக்கு பாதாள சாக்கடைக்கான கட்டணமும் அதிகமாக வரும்போல் தெரிகிறது.

பாதாள சாக்கடை தொட்டிக்கு இன்று வரை இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால் திருமதி பத்மினி அவர்கள் நேரடியாக கழிவுநீர் தொட்டிக்கு கழிவுநீரை திறந்து விட்டுள்ளார். கழிவுநீர் தொட்டி மூடப்படாமல் உள்ளதால் துர்நாற்றம் வீசி தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாகவும் கடந்த 27.01.2025 அன்று மாவட்ட ஆட்சியரிடம் Monday Petition கொடுத்துள்ளேன். ஆனால் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திருமதி பத்மினி அவர்கள் நாமக்கல் மாவட்ட கருவூல

அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதால் அடிக்கடி எங்களது வாசல் படிக்கு நேர் நின்று கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டே இருக்கிறார். காரணம் தெரியவில்லை. மறுபக்கம் மூடாத திறந்த நிலையில் கழிவுநீர் தொட்டி துர்நாற்றம் வீசி சுவாசிக்க இயலாத நிலையில் உள்ளது. அதுவும் காலை வேளையில் பாத்ரூம் அதிகம் பயன்படுத்துவதால் துர்நாற்றம் அதிகப்படியாக வீசுகிறது. வயதான காலத்தில் மன உளைச்சலுக்கும் நோய் தொற்றுக்கும் உள்ளாகி இருக்கிறோம். ஏற்கனவே நான் நெஞ்சுவலியாலும் எனது மனைவி மூட்டு வலியாலும் அவதிக்கு உள்ளாகி வைத்தியம் பார்த்துக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். எனவே அம்மா அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நேரில் பார்வையிட்டால் தான் உண்மை நிலைமை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதையும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

**05.08.2025 நாளிட்ட மனு**

நாமக்கல் மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் இருந்து வந்து பார்வையிட்டு மாநகராட்சி சாலையில் 35 சதுர அடிகள் நாங்கள் ஆக்கிரமித்துள்ளதாக ஒரு அறிவிப்பினை வழங்கியுள்ளார்கள். நான் இது பற்றி நகரமைப்பு அலுவலர் அவர்களிடம் நேரில் சென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க மதிப்பிற்குரிய நகரமைப்பு அலுவலர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டு எதிர் வீட்டுக்காரர் திருமதி பத்மினி அவர்களையும் நேரில் வரவழைத்து சாலையை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்று எச்சரிக்கை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறிவிட்டுச் சென்றார்கள். மேலும் எதிர் வீட்டுக்காரர் திருமதி பத்மினி அவர்கள் ஆக்கிரமிப்பை அகற்றாமல் திறந்த நிலையில் மூடப்படாமல் இருந்த பாதாள சாக்கடை தொட்டியினை மாநகராட்சி அனுமதி பெறாமலே 3.8.2025 மூடி சிமெண்ட் கலவை பூசி மூடிவிட்டார். தற்போது எங்களது வீட்டிற்கு அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை மெயின் தொட்டி வெகுதூரத்திலும் அதே நேரம் 11 வீட்டிற்கு ஒரு தொட்டியும், திருமதி பத்மினி அவர்கள் வீட்டிற்கு மட்டும் தனியாக மெயின் தொட்டி ஒன்று மிக அருகாமையிலும் சாலையை விட உயர்த்தி அமைத்து கொடுத்துள்ளார்கள். நிர்ணயிக்கப்பட்ட இடத்தை மாற்றி எதிர் வீட்டுகாரருக்கு சாதகமாகவே அமைக்கப்பட்டுள்ளது. எங்களது வீட்டு கழிவுநீர் தொட்டிக்குச் செல்ல இயலாத நிலையில் உள்ளது. அதேபோல் சாலையை உயரப்படுத்தியுள்ளதால் எங்களது வீட்டிற்குள் மழைநீர் வர அதிக வாய்ப்புள்ளது. எனவே ஐயா அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வயதான காலத்தில் நிம்மதியின்றி மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி சிரமப்படுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு மீண்டும் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 17.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் தனது 15.07.2025 மற்றும் 16.12.2025 நாளிட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**15.07.2025 நாளிட்ட கடிதம் எண் 347/2025/எப்.2**

''நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38ஜி, திரு. V. முத்துசாமி என்பவரின் புகார் தொடர்பாக, மாநகர சார் ஆய்வாளர் மூலம் இடத்தை நேரில் சென்று

அளவீடு செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம், வார்டு–C, பிளாக்–3, T.S. No.58/1A ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது தென்வடலாக அமைகிறது என்றும், பாதையின் அகலமானது 20 அடி எனவும் வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டை அளவீடு செய்தபோது வடபுறம் மற்றும் தென்புறம் 40 அடி உள்ளது என கிரையப்பத்திரத்தில் உள்ளது. இதில் பிரதிவாதியின் கிழமேல் வடபுறம் மட்டும் 41 அடி உள்ளது. 1 அடி கேட் மற்றும் காம்பவுண்ட் சுவர் பாதையில் அமைந்துள்ளது என்றும், அதே போல் வாதியின் வீட்டை அளவீடு செய்ததில் கிரைய ஆவணத்தில் உள்ளது போல் 40 அடியில் வீடு அமைந்துள்ளது. ஆனால் வீட்டின் மேற்கூறை 1 அடி பாதையில் நீட்டிவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துள்ளார். நாமக்கல் மாநகராட்சி அறிவிப்பு நாள் 08.07.2025 மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 128ன்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திரு. முத்துசாமி, த/பெ வையாபுரி மற்றும் திருமதி பத்மினி,ஜெட்டிக்குளத் தெரு, உபசந்து 2 அவர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் கழிவுநீர் செல்ல சீரான முறையில் வெளியேறும் வகையில் பணி நடைபெற்று வருவதாகவும், இதனால் மனுதாரருக்கு எவ்வித பாதிப்பு ஏதும் இல்லை என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

<u>16.12.2025 நாளிட்ட கடிதம் எண் 347/2025/எப்.2</u>

மனுதாரர் புகார் தொடர்பாக மாநகர சார் ஆய்வாளர் மூலம் இடத்தை நேரில் சென்று அளவீடு செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம் வார்டு–C, பிளாக்–3, TS No.58-1A ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது தென்வடலாக அமைகிறது என்றும், பாதையின் அகலமானது 20 அடி எனவும் வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டை அளவீடு செய்த போது வடபுறம் மற்றும் தென்புறம் 40 அடி உள்ளது என கிரையப்பத்திரத்தில் உள்ளது. இதில் பிரதிவாதியின் கிழமேல் வடபுறம் மட்டும் 41 அடி உள்ளது. 1 அடி கேட் மற்றும் காம்பவுண்ட் சுவர் பாதையில் அமைந்துள்ளது என்றும், அதே போல் வாதியின் வீட்டை அளவீடு செய்ததில், கிரைய ஆவணத்தில் உள்ளது போல் 40 அடியில் வீடு அமைந்துள்ளது. ஆனால் வீட்டின் மேற்கூரை 1 அடி பாதையில் (Sunshade) மூலம் நீட்டி விடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்புற அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 128இன்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திரு. முத்துசாமி த/பெ வையாபுரி மற்றும் திருமதி பத்மினி. ஜெட்டிக்குளத் தெரு உபசந்து–2 அவர்களுக்கும் அறிவிப்பு 08.07.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இறுதி அறிவிப்பு 12.12.2025 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் கழிவு நீர் செல்ல சீரான முறையில் வெளியேறும் வகையில் பணி நடைபெற்று வருவதாகவும், இதனால் மனுதாரருக்கு எவ்வித பாதிப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

15.12.2025 அன்று நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் காவல் துறையின் பாதுகாப்புடன் நில அளவர், இளநிலைப் பொறியாளர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் மேற்படியார்களின் வீட்டின் முன்புறம் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர்க் குழாய் சரி செய்து தர இளநிலைப் பொறியாளர் உறுதி அளித்ததின் பேரில் சாலை மற்றும் பாதாள சாக்கடைப் பணிகள் மாநகராட்சி செய்தது தங்களுக்கு திருப்திகரமாக உள்ளதால் சமரசமாகச் செல்வதாக திரு. V. முத்துசாமி மற்றும் திருமதி.பத்மினி ஆகியோர் ஆணையாளருக்கு சம்மதக் கடிதம் எழுதிக்

கொடுத்துள்ளதாலும், மேற்படி சாலையானது மேலே தொடர்ந்து செல்லாமல் மனுதாரர்களின் இடத்தோடு முடியக்கூடிய முட்டுச்சாலையாக உள்ளது என்பதையும் பணிகள் முடிவுற்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரர் திருமதி சி. பத்மினி என்பவர் தனது 11.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> திரு. முத்துசாமிக்கு ந.க. எண் 347/2025/எப்1 நாள் 08.07.2025 தேதியில் 35 ச.அ. அளவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளார் என்று ஆணையாளர் நாமக்கல் மாநகராட்சி நகர சார் ஆய்வாளர் நாமக்கல் அவர்களின் சார்பாக திரு. முத்துசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
>
> மேலும் திரு. முத்துசாமி அவர்கள் நாமக்கல் மாநகராட்சியில் Bill Collector ஆக பணிபுரிந்துள்ளதால் இவர் தன்னுடைய வீட்டை முறையான அங்கீகரிக்கப்படாத கட்டிட கட்டும் அனுமதி (Un-Authorised building Construction) பெறாமல் வீடு கட்டப்பட்டுள்ளளது. அவ்வீட்டிற்கு மேலும் மாநகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வசதியும் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் இவ்வீட்டின் மீது நடவடிக்கை எடுத்து முறையான அனுமதி இல்லாத வீட்டை இடிக்க ஆணையிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.
>
> எங்கள் வீடு தெருவின் கடைசி முட்டு சந்தில் உள்ளது. தெருவில் எவ்விதமான கழிவு நீர் வெளியேற்றும் வசதி இன்னும் மாநகராட்சி மூலமாகவும் செய்யப்படவில்லை. சிமெண்டு அல்லது தார் ரோடு வசதி செய்யப்படவில்லை. எங்கள் தெருவில் அவரவர்கள் சொந்த முயற்சியில் கழிவு நீர் பூமிக்குள் கழிவு நீர் தொட்டி அமைத்து அதற்குள் செலுத்த செய்துள்ளோம். மாநகராட்சி மூலம் பாதாள சாக்கடை வசதி செய்யும் போதும், இவர் தன்னுடைய வீட்டிற்கு நேராக குழி அமைத்தால் வீட்டிற்கு நாற்றம் அடிக்கும் என்பதால் இவர் சொல்லிய இடத்தில் தான் குழி போடப்பட்டுள்ளது.
>
> நான் மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முறையான கட்டிட அனுமதி பெற்றுள்ளேன். க.வி. எண் 051/CP/18–19/0000385 பி.ஏ. எண் 051/BPA/2019/00700 உ. ஆணை 051/BL/2019/00093 நாள் 05.02.2019 ஆகும்.
>
> நான் 2020 மார்ச் மாதம் 20 தேதி நான் வீடு கட்டி குடி வந்த நிலையில் நான் கணவர் இல்லாததால் நான் தனியாக வசித்து வருகிறேன். திரு. முத்துசாமி என்னுடைய வீட்டிற்குள் வந்து என்னிடம் தகாத முறையில் நடக்க முயற்சி செய்தார். அதற்கு நான் சம்மதிக்காத காரணத்தினாலும், நான் அதை கண்டித்து வெளியே போய்விடு என்று கூறிவிட்டேன். அதிலிருந்து அவரிடம் நான் பேசுவது இல்லை. இதன் காரணமாகவும், மேலும் நான் கிறிஸ்துவ மதத்தில் ஈடுபாடு கொண்டுள்ளதால் என்னுடைய குடியிருப்பை இவரின் வீட்டிற்கு எதிராக இருக்கக் கூடாது என்ற நோக்குடனும் என்னுடைய வீட்டை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் என்னுடைய வீட்டை விலைக்கு கொடுத்துவிட்டு நீ வேறு இடம் சென்று விடு என்று என்னிடம் மிரட்டினார். நான் கொடுக்க மறுத்த காரணத்தினால் இவர் என்னை 2020 லிருந்து கடந்த 6 வருடங்களாக தரக்குறைவாக திட்டியும் பலரை வைத்து மிரட்டியும் பலவகையான பொய் புகார்களை சொல்லியும் வருகிறார்கள்.

தங்களுக்கும் அனுப்பப்பட்ட மனுவிலும் இவ்வாறு உண்மைக்கு புறம்பான பொய்யான புகார் தான் கொடுத்துள்ளார். எனவே, திரு. முத்துசாமி அவர்களின் மனுவை தள்ளுபடி செய்தும் எனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலையும் பணம் செலவையும் கருத்தில் கொண்டும் பண பலனை பெற்றுக் கொடுக்குமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 199/மா/2025 எண்ணிட்ட முறையீட்டு மனு 17.12.2025 விசாரிக்கும்பட்சத்தில் என்னுடைய இந்த மனுவையும் சேர்த்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. திருமதி சி. பத்மினி என்பவர் மேற்கண்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள 23.07.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

திரு. முத்துசாமி அவர்களின் புகாரின் பேரில் நாமக்கல் மாநகராட்சியின் மூலம் எனக்கு முன்னறிவிப்பு செய்யாமல் என்னுடைய வீட்டை அளந்து 08.07.2025 அன்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதில் என்னுடைய வீடு 20 ச.அ. ஆக்கிரமிப்பு மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் இருப்பதாகவும், திரு. முத்துசாமி வீடு மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் 35 ச.அ. ஆக்கிரமிப்பு இருப்பதாகவும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருந்தது.

என்னுடைய வீடு மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் 20 ச.அ. ஆக்கிரமிப்பு இல்லை. மாநகராட்சி சர்வேயர் மூலம் சங்கிலி பிடித்து அளவீடு செய்ய வேண்டும்.

இதில் திரு. முத்துசாமி என்பவரின் வீடு 2 அடி அகலம் 40 அடி நீளம் ரோட்டில் சன்சைடு ஆக்கிரமிப்பு உள்ளது. மற்றும் வீடும் 4 இஞ்ச் ரோட்டில் ஆக்கிரமிப்பு உள்ளது. முறையாக நாமக்கல் மாநகராட்சியில் அனுமதியும் பெறாமல் வீடு திரு. முத்துசாமி கட்டியுள்ளார். இதை நான் பலமுறை மாநகராட்சிக்கு கடிதம் எழுதியும் இதுவரை நாமக்கல் மாநகராட்சி நிர்வாகம் திரு. முத்துசாமி அவர்களுக்கு சாதகமாகவே செயல்படுகிறது. எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருடைய ஆக்கிரமிப்பு இதுவரையும் அகற்றப்படவில்லை.

திரு. முத்துசாமி அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில், நாமக்கல் மாநகராட்சியின் Town Planning Officer திருமதி கலைவாணி மேடம் அவர்கள் என்னிடம் 21.7.2025 மதியம் இப்பிரச்சனை குறித்து விசாரித்தார். அவர் நீங்களும் அவரும் சமாதானமாக போங்கள் என்றும், என்னுடைய car என்னுடைய வீட்டின் அருகில் நிறுத்தி இருந்ததை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் இனிமேல் நீங்கள் கார் வீட்டின் ஓரமாக ரோட்டில் நிறுத்த வேண்டாம் என்றும் கூறினார். அந்த தெருவில் அனைத்து வீட்டின் ஓரமாக அவரவர் கார் நிறுத்தப்பட்டு இருந்தது. அதில் என்னுடைய காரை மட்டும் எடுத்து விடுங்கள் இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு தலை பட்சமாக கூறினார். அதற்கு நான் இது முட்டு சந்து இந்த ரோட்டில் மக்கள் பயன்பாடு இல்லை என்றும் இந்த ரோட்டில் உள்ள அனைத்து கார்களும் எடுத்துக் கொண்டால் நான் எடுத்துக் கொள்கிறேன் என்றும் கூறினேன்.

திரு. முத்துசாமி வீட்டின் ஆக்கிரமிப்பை முதலில் அகற்றிய பின் என்னுடைய வீட்டை முறையாக சர்வேயர் மூலம் அளந்து ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் அதை அகற்றிவிடவும்,

மாநகராட்சி பதிவேடுகளின்படி ரோடு நீளம், அகலம் அளந்த ஆக்கிரமிப்பை அகற்றவும், அடிப்படை வசதியான சாலை வசதி கூட செய்யப்படாமல் மழை காலங்களில் பெறும் அவதிப்படுகிறோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மனுதாரர் திரு. V. முத்துசாமி என்பவர் 17.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38-G என்ற முகவரியில் எனது மனைவி திருமதி M. காளியம்மாள் பெயரில் உள்ள நிலத்தில் சொந்தமாக வீடு கட்டி நானும் எனது மனைவியும் குடியிருந்து வருகிறோம். எங்களது வீடு வீதியின் கடைசி பகுதியில் காம்பவுண்ட் சுவரை ஒட்டி உள்ளது. அதற்கு மேல் வீடுகள் இல்லை.

எங்களது வீட்டிற்கு எதிர்புறத்தில் திருமதி பத்மினி என்பவர் 20 அடி பொதுப்பாதையில் 1½ அடி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி உள்ளார். அதோடு மட்டுமல்லாமல் தனது வீட்டை ஒட்டி சுமார் 10 அடி அகலத்திற்கு சுமார் 1½ அடிக்கு மேலாக பொதுப்பாதையை உயர்த்தி கான்கிரீட் தளம் அமைத்துள்ளார். அதனால் எங்களது வீடு பள்ளத்தில் உள்ளது. இது சம்பந்தமாக நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதன் பிறகு கடந்த 16.05.2023 அன்று நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் இரண்டு பணியாளர்களுடன் நேரில் வந்து திருமதி பத்மினி அவர்கள் 1½ அடி பொது பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தையும் பொது பாதையையும் அளவீடு செய்துவிட்டு இந்த கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி முறைக்கேடாக பெற்றுள்ளதாகவும் உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிவிட்டு சென்று எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர் மெயின் தொட்டி நிர்ணயிக்கப்பட்ட இடத்தை விட்டு திருமதி.பத்மினி அவர்களுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மழைநீர் எங்களது வீட்டிற்குள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

திருமதி பத்மினி அவர்களின் வீட்டில் கழிவுநீர் தொட்டி மூடப்படாமல் உள்ளதால் துர்நாற்றம் வீசி தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும், எனது புகார் குறித்து எங்கள் தெரு பொதுமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க மற்றும் எதிர் மனுதாரராகிய திருமதி பத்மினி அவர்கள் எங்கள் மீது ஏதேனும் புகார் தெரிவித்து அதை வாபஸ் செய்யும்பட்சத்தில் எனது மேற்கண்ட புகார் மீது நடவடிக்கை தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளோம் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளார். இந்த வாக்குமூலத்தில் மனுதாரரின் மகன் திரு.மு.சரவணன் என்பவரும் கையொப்பமிட்டுள்ளார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் நாமக்கல் மாநகராட்சி நகர திட்டமிடுநர் 17.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38ஜி, திரு. V. முத்துசாமி என்பவரின் புகார் தொடர்பாக, மாநகர சார் ஆய்வாளர் மூலம் இடத்தை நேரில் சென்று அளவீடு செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம், வார்டு–C, பிளாக்–3, T.S. No.58/1A ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது தென்வடலாக அமைந்துள்ளது மற்றும் பாதையின் அகலமானது 20 அடி எனவும் வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டை அளவீடு செய்தபோது வடபுறம் மற்றும் தென்புறம் 40 அடி உள்ளது என கிரையப்பத்திரத்தில் உள்ளது. இதில் பிரதிவாதியின் கிழமேல் வடபுறம் மட்டும் 41 அடி உள்ளது. 1 அடி கேட் மற்றும் காம்பவுண்ட் சுவர் பாதையில் அமைந்துள்ளது என்றும், அதே போல் வாதியின் வீட்டை அளவீடு செய்ததில் கிரைய ஆவணத்தில் உள்ளது போல் 40 அடியில் வீடு அமைந்துள்ளது. ஆனால் வீட்டின் மேற்கூறை 1 அடி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாநகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 128ன்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திரு.முத்துசாமி, மற்றும் திருமதி பத்மினி, அவர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஜெட்டிக்குளத் தெரு நாமக்கல் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. எனினும் உப சந்து 2, ஜெட்டிக்குளத் தெருவில் கழிவுநீர் செல்ல சீரான முறையில் வெளியேறும் வகையில் பணி நடைபெற்று உள்ளது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''

9. மற்றொரு எதிர்மனுதாரரான திருமதி சி. பத்மினி மற்றும் அவருக்கு உதவியாக திரு. C. கிருஷ்ணன் ஆகியோர் 17.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

எங்கள் வீடு தெருவின் கடைசி முட்டு சந்தில் உள்ளது. தெருவில் எவ்விதமான கழிவு நீர் வெளியேற்றும் வசதி இன்னும் மாநகராட்சி மூலமாகவும் செய்யப்படவில்லை. சிமெண்டு அல்லது தார் ரோடு வசதி செய்யப்படவில்லை. எங்கள் தெருவில் அவரவர்கள் சொந்த முயற்சியில் கழிவு நீர் பூமிக்குள் கழிவு நீர் தொட்டி அமைத்து அதற்குள் செலுத்த செய்துள்ளோம். மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் எங்களால் செய்யப்படவில்லை. நான் முறையான கட்டிட அனுமதி பெற்றுள்ளேன். எங்களால் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை.

ஆனால் V.முத்துசாமி அவர்கள் நாமக்கல் மாநகராட்சியில் பில் கலெக்டர் ஆக பணிபுரிந்துள்ளதால் இவர் தன்னுடைய வீட்டை முறையான கட்டிட கட்டுமானம் அனுமதி பெறாமல் வீடு கட்டியுள்ளார். அவ்வீட்டிற்கு மேலும் மாநகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளார். என்னுடைய குடியிருப்பை இவரின் வீட்டிற்கு எதிராக இருக்கக்கூடாது என்ற நோக்கத்திலும் என்னுடைய வீட்டை விலைக்கு கொடுத்துவிடு என்று கூறுகிறார். நான் கொடுக்க மறுத்த காரணத்தினால் இவர் என்னை 2020 லிருந்து கடந்த 6 வருடங்களாக பொய் புகார்களை அளித்து வருகிறார்.

மேலும், எங்கள் தெரு நாமக்கல் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், திரு. V.முத்துசாமி H/o.காளியம்மாள் அவர்களுக்கு மாநகராட்சி ஆணையாளர் ந.க.எண்.347/2025/எப்1 மூலம் அவர் மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் 35 சதுரடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என கடந்த 08.07.2025 தேதி அன்று அறிவிப்பு வழங்கினார்கள். திரு.முத்துசாமி அவர்கள் 24–வார்டு கவுன்சிலர் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையிலும், மாநகராட்சி Town Planning Officer மற்றும் காவல் துறையினர் முன்னிலையிலும் தனது புகாரினை திரும்ப பெற்றுக்கொள்வதாக 15.12.2025–அன்று ஒப்புக்கொண்டு கையொப்பம் இட்டுள்ளார். மேலும் இம்முறைமன்ற நடுவம் முன்பாக தனது புகாரை திரும்ப பெற்றுக்கொள்வதாக இன்று 17.12.2025 தேதியில் நேரடி வாக்குமூலம் அளித்துள்ளார். அவ்வாறு அவர் தனது புகாரை திரும்ப பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் வி.முத்துசாமி அவர்கள் கறைபடிந்த கைகளுடன் (Without Clean Hands) அளித்துள்ள அவருடைய புகாரை தள்ளுபடி செய்வதுடன் எங்களுக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் பொருள் செலவிற்கு செலவுத்தொகையுடன் (Costs) அவரது மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, உண்மைக்கு மாறாக புகார் அளித்துள்ள திரு.V. முத்துசாமி அவர்களின் மனுவினை தள்ளுபடி செய்து உரிய உத்திரவினை வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.''

10. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்கள், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரரான திருமதி சி. பத்மினி அவர்களின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

"நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38-G என்ற முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது வீட்டிற்கு எதிர்புறத்தில் திருமதி பத்மினி என்பவர் 20 அடி பொதுப்பாதையில் 1½ அடி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியும், அவரது வீட்டை ஒட்டி சுமார் 10 அடி அகலத்திற்கு சுமார் 1½ அடிக்கு மேலாக பொதுப்பாதையை உயர்த்தி கான்கிரீட் தளம் அமைத்துள்ளதால், அவரது வீடு பள்ளத்தில் உள்ளது என்றும், இது சம்பந்தமாக நாமக்கல் நகராட்சி ஆணையாளருக்கு புகார் அளித்துள்ளதும், மனுதாரர் புகார் குறித்து தங்கள் தெரு பொதுமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கவும் மற்றும் எதிர்மனுதாரராகிய திருமதி.பத்மினி என்பவர் மனுதாரர் மீது ஏதேனும் புகார் தெரிவித்து அதை வாபஸ் செய்யும்பட்சத்தில் தனது மேற்கண்ட புகார் மீது நடவடிக்கை தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளார் என்பதும் மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் மற்றும் அவரது மகன் திரு. மு, சரவணன் ஆகியோரது வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

நாமக்கல், உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38G, திரு. V. முத்துசாமி என்பவரின் புகார் தொடர்பாக, மாநகர சார் ஆய்வாளர் மூலம் அவர்களது இடத்தை நேரில் சென்று அளவீடு செய்யப்பட்டு, நாமக்கல் மாநகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 128ன்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திரு.முத்துசாமி மற்றும் திருமதி பத்மினி இருவருக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட ஜெட்டிக்குளத் தெரு நாமக்கல் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை என்பதும், நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் காவல் துறையின் பாதுகாப்புடன் நில அளவர், இளநிலைப் பொறியாளர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் மனுதாரர் மற்றும் மனுதாரரின் எதிர்வீட்டுக்காரரின் வீடுகளின் முன்புறம் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பாதாள சாக்கடை கழிவுநீர்க் குழாய் சரி செய்து தர இளநிலைப் பொறியாளர் உறுதி அளித்ததின் பேரில், சாலை மற்றும் பாதாள சாக்கடைப் பணிகள் மாநகராட்சி செய்தது தங்களுக்கு திருப்திகரமாக உள்ளதால் சமரசமாக செல்வதாக திரு. V. முத்துசாமி மற்றும் திருமதி பத்மினி ஆகியோர் ஆணையாளருக்கு சம்மதக் கடிதம் எழுதிக் கொடுத்துள்ளதாலும், மேற்படி சாலையானது மேலே தொடர்ந்து செல்லாமல் மனுதாரர்களின் இடத்தோடு முடியக்கூடிய முட்டுச்சாலையாக உள்ளது என்பதும், எதிர்மனுதாரரான நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மற்றொரு எதிர்மனுதாரரின் வீடு தெருவின் கடைசி முட்டு சந்தில் உள்ளதால், தெருவில் எவ்விதமான கழிவு நீர் வெளியேற்றும் வசதி இன்னும் மாநகராட்சி மூலமாகவும் செய்யப்படவில்லை என்பதும், சிமெண்டு அல்லது தார் ரோடு வசதி செய்யப்படவில்லை என்பதும், அவரது தெருவில் அவரவர்கள் சொந்த முயற்சியில் கழிவு நீர் பூமிக்குள் கழிவு நீர் தொட்டி அமைத்து அதற்குள் கழிவு நீர் செல்கிறது என்பதும், மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் தங்களால் செய்யப்படவில்லை என்பதும், 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவர் முன்பாக தனது புகாரை திரும்ப பெற்றுக்கொள்வதாக திரு.V.முத்துசாமியால் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மற்றொரு எதிர்மனுதாரரான திருமதி சி. பத்மினி

என்பவரின் கடிதங்கள் மற்றும் திருமதி சி. பத்மினி மற்றும் அவருக்கு உதவியாக விசாரணையில் கலந்து கொண்ட திரு. C. கிருஷ்ணன் ஆகியோர் சமர்ப்பித்த வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், நாமக்கல் உபசந்து 2, ஜெட்டிகுளத் தெரு, கதவு எண் 38G திரு. V. முத்துசாமி மற்றும் அவரது எதிர்வீட்டில் வசிக்கும் திருமதி சி. பத்மினி ஆகியோரது வீடுகள் உள்ள மாநகராட்சி இடத்தினை கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதனையும், மேற்கண்ட கட்டுமானங்கள் மற்றும் கழிவுநீர் இணைப்பு ஆகியவை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998–ன்படி அமைந்திருப்பதை உறுதி செய்யுமாறு நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. V. முத்துசாமி,
கதவு எண் 38-G,
ஜெட்டிகுளத் தெரு, உபசந்து 2,
நாமக்கல் –637 001.

(2) ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி,
நாமக்கல்.

(3) திருமதி சி. பத்மினி,
கதவு எண் 38-I,
ஜெட்டிகுளத் தெரு, உபசந்து 2,
நாமக்கல் –637 001.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

25/2/26
செயலாளர்.
25.2.26